

காஞ்சிபுரம் வடக்கு மாவட்டச் செயலாளரும், அமைச்சருமான தா.மோ.அன்பரசன் திருப்பெரும்புதூர் தொகுதிக்குட்பட்ட, குன்றத்தூர் நகரம், பாகம் எண் 209ல் பாக நிலை முகவர் (BLA2) செந்தில் குமார் தலைமையில் நடைபெற்ற ”என் வாக்குச்சாவடி வெற்றி வாக்குச்சாவடி பரப்புரை கூட்டத்தில் உரையாற்றினார். அருகில் தொகுதி தேர்தல் பார்வையாளர் கே.ஜி.பாஸ்கர் சுந்தரம், நகரச் செயலாளர் கோ.சத்தியமூர்த்தி, நிர்வாகிகள் சங்கர், திருநாவுக்கரசு, ராசமாணிக்கம், குணசேகர், மணிமாறன், சிதம்பரம் மற்றும் கழக நிர்வாகிகள் உள்ளனர்.

### நே.சிற்றரசு தலைமை! மா.பா. அன்புதுரை – த.தேவராஜ் முன்னிலை!

# 113 ‘அ’ வட்டத்தில் என் வாக்குச்சாவடி வெற்றிவாக்குச்சாடி பரப்புரைக் கூட்டம்!

### தயாநிதி மாறன் எம்.பி. – அன்பகம் கலை – நா. எழிலன் எம்.எல்.ஏ. – சைதை சாதிக் பங்கேற்பு!

சென்னை, டிச. 12-

தமிழ்நாடு முதலமைச்சர் கழக தலைவர் அவர்களின் ஆணையின்படி துணை முதலமைச்சர் இளம் தலைவர் அவர்களின் ஆலோசனைப்படி 113 ‘அ’ வட்டத்தில் இன்று 12-12-2025, வெள்ளிக்கிழமை, மாலை 5.00 மணி அளவில் பாகம்-181. சிவைசைலம் தெரு. பாலமுத்து கிருஷ்ணன் தெரு. கிருஷ்ணபாய் தெரு. பாகம்-182. தங்கவேல் தெரு. திருமலைபிள்ளை சாலை. பாகம்-183. சீரணிபுரம் குடிசை பகுதி. பாலாஜி அவென்யு 1. 2வது தெருக்கள் ஆகிய பாகங்களில் தமிழ்நாடு தலை குனியாது. என் வாக்குச்சாவடி வெற்றி வாக்குச் சாவடி என்ற பரப்புரை நடைபெறுகிறது. இக் கூட்டத்தில் சென்னை மேற்கு மாவட்ட கழக செயலாளர் நே. சிற்றரசு, நாடாளு மன்ற உறுப்பினர் தயாநிதி மாறன். கழக இணை அமைப்பு செயலாளர் அன்பகம் கலை, ஆயிரம் விளக்கு சட்டமன்ற உறுப்பினர் மருத்துவர் நா. எழிலன், தொகுதி பார்வையாளர் சைதை சாதிக், பகுதி துணை செயலாளர் மு. வெங்கடேசன் பங்கேற்று சிறப்புரை ஆற்ற உள்ளார்கள். இப் பரப்புரை கூட்டத்திற்கு பாகம் 181. 182. 183 பாகத்திற்க்கு உட்பட்ட மாவட்ட பகுதி கழக நிர்வாகிகள், வட்ட கழக நிர்வாகிகள். முன்னாள். இந்நாள் நிர்வாகிகள். அனைத்து அணியின் நிர்வாகிகள் BLA-2, BLC, BDA மற்றும் கழக முன்னோடிகள் பங்கேற்று சிறப்பிக்குமாறு கேட்டுக் கொள்கிறேன்.

இவ்வாறு வட்ட கழக செயலாளர் த. தேவராஜ் கேட்டுக்கொள்கிறார்.



பல்லாவரம் சட்டமன்றத் தொகுதி பல்லாவரம் வடக்கு மற்றும் தெற்கு பகுதி திமுக சார்பாக இளைஞர் அணி நிர்வாகிகள் ஆலோசனை கூட்டம் தனியார் திருமண மண்டபத்தில் நடைபெற்றது இக்கூட்டத்தில் மாவட்டக் கழகத் துணைச் செயலாளர் இ. கருணாநிதி எம்.எல்.ஏ கலந்துகொண்டு திருவண்ணாமலையில் நடைபெற உள்ள இளைஞர் அணி நிர்வாகிகள் சந்திப்பு மாநாட்டு குறித்து ஆலோசனை வழங்கி சிறப்புரை ஆற்றினார் அப்பொழுது பல்லாவரம் வடக்கு பகுதி செயலாளர் மண்டல தலைவர் இ. ஜோசப் அண்ணாதுரை பல்லாவரம் தெற்கு பகுதி கழக செயலாளர் இ. எஸ். பெர்னார்ட் மாவட்ட இளைஞரணி துணை அமைப்பாளர் கோ. ஜானகிராமன் பகுதி இளைஞர் அணி அமைப்பாளர்கள் சரத் வெங்கடேசன் எஸ். சாகுல் அமித் பகுதி கழக நிர்வாகிகள் ஆகியோர் உடன் இருந்தனர்.

### அனைத்துலக வள்ளலார் மாநாட்டில்

# புதிய அறிவிப்புகளை முதலமைச்சர் வெளியிடுவார்!

### கொளத்தூரில் ஆய்வு – அமைச்சர் பி.கே.சேகர்பாபு தகவல்!



சென்னை, டிச.12-

தமிழ்நாடு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்களின் வழிகாட்டுதலின்படி, இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர் பி.கே. சேகர்பாபு நேற்று முன்தினம் (10.12.2025) சென்னை, கொளத்தூர், பூம்புகார் நகரில் கட்டப்பட்டு வரும் கபாலீசுவரர் கலை மற்றும் அறிவியல் கல்லூரி கட்டட கட்டுமானப் பணிகளையும், இராஜாஜி நகரில் நடைபெற்று வரும் மூத்த குடிமக்கள் உறைவிட கட்டுமான பணிகளையும் நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்து பணிகளை விரைந்து முடிக்க அறிவுரைகளை வழங்கினார்.

அதனைத் தொடர்ந்து, வடபழனி வடபழனி ஆண்டவர் திருக்கோயிலின் உபக் கோயிலான அங்காள பரமேஸ்வரி திருக்கோயிலில் ரூபாய் 20.50 இலட்சம் மதிப்பீட்டில் மேற்கொள்ளப்பட உள்ள திருப்பணிகளை தொடங்கி வைத்த அவர், வடபழனி திருக்கோயிலின் மற்றொரு உபக் கோயிலான ஆதிமூலப்பெருமாள் திருக்கோயில் ரூ.3.37 கோடி மதிப்பீட்டில் நடைபெற்று வரும் கருங்கல் கட்டுமான பணிகளையும் நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்தார்.

பின்னர் இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் செய்தியாளர்களிடம் தெரிவித்ததாவது

மயிலாப்பூர், கபாலீசுவரர் திருக்கோயில் சார்பில் கொளத்தூரில் தற்காலிக கட்டிடத்தில் நடத்தப்பட்டு வரும் கலை மற்றும் அறிவியல் கல்லூரியில் சுமார் ஆயிரம் மாணவ மாணவியர் கல்வி பயின்று வருகின்றனர். இக்கல்லூரிக்கு நிரந்தரம் கட்டிடம் கட்டுவதற்கு பூம்புகார் நகரில் பணிகள் துரிதமாக நடைபெற்று வருகின்றன. வரும் ஜனவரி மாதத்தில் புதிய கல்லூரி கட்டடம் மாணவர்களின் பயன்பாட்டிற்கு ஒப்படைக்கப்படும். அதே போல், கொளத்தூர் ராஜாஜி நகரில் எவ்வித கட்டணமும் இன்றி 100 மூத்த குடிமக்கள் பயன்பெறும் வகையில் ரூ.8.88 கோடி மதிப்பீட்டில் கட்டப்பட்டு வரும் மூத்த குடிமக்கள் உறைவிடமும் வரும் ஜனவரி மாதத்திற்குள் பயன்பாட்டிற்கு கொண்டு வரப்படும்.

சன்மார்க்க நெறியை போதித்தவரும், ஒழுக்கத்தின் அடையாளமாக திகழ்கின்ற, அவருடைய உள்ளத்திற்கு ஏற்றார் போல் வெள்ளுடையில் காட்சி தருகின்ற அருட்பெருஞ் ஜோதி வள்ளலாருக்கு சிறப்பு சேர்க்கும் வகையில் வருகின்ற 2026 பிப்ரவரி மாதம் முதல் வாரத்தில் கீழ்பாக்கம் ஏகாம்பரநாதர் திருக்கோயிலுக்கு சொந்தமான மைதானத்தில் 10,000 சன்மார்க்க அன்பர்கள் பங்கேற்கும் வகையில் அனைத்துலக வள்ளலார் மாநாட்டினை தமிழ்நாடு முதலமைச்சர் தொடங்கி வைக்க உள்ளார்கள். இம் மாநாட்டில் கண்காட்சி அரங்குகள், கருத்தரங்கம், ஆய்வரங்கம், மூலிகை கண்காட்சி, நாள் முழுவதும் அன்னதானம் உள்ளிட்ட பல்வேறு நிகழ்வுகள் நடத்தப்பட உள்ளன. நிறைவாக, இம்மாநாட்டில் தமிழ்நாடு முதலமைச்சர் வள்ளலார் குறித்த பல்வேறு புதிய அறிவிப்புகளையும் வெளியிடுவார். நேற்றைய தினம் அதற்கான ஆரம்ப கட்ட பணிகளை தொடங்கியுள்ளோம்.

தமிழ்நாட்டில் கல்வி, வேலைவாய்ப்பு, மருத்துவம் உள்ளிட்ட துறைகள் சரியில்லை அதற்கு காரணம் திமுக ஆட்சி தான் என த.வெ.க கட்சித் தலைவர் நடிகர் விஜய் தெரிவித்துள்ளாரே என செய்தியாளர்கள் கேட்டதற்கு, அதை சொல்பவர் சரியில்லை என்று நான் கூறுகிறேன்.

தைலாபுரத்தை முழுவதுமாக திமுக டேக் ஓவர் செய்து விட்டதாக அன்புமணி தெரிவித்துள்ளாரே என செய்தியாளர்கள் கேட்டதற்கு, தன்னை இந்த உலகத்திற்கு உயிர் கொடுத்து அறிமுகப்படுத்தியவரையே திருப்திகரமாக வைத்துக் கொள்ள முடியாதவர்களுக்கெல்லாம் பதில் சொல்வதற்கு தகுதி உடையவர்கள் அல்ல என்பது எனது கருத்தாகும். அவருடைய தந்தையாரே அவருக்கு கைக்கூலி என்ற பட்டத்தை வழங்கி உள்ளார். ஆகவே வேறு யாருக்கும் அந்த பட்டத்தை வழங்க கூடிய தகுதி அன்புமணிக்கு இல்லை என்று தெரிவித்தார்.

இந்த ஆய்வுகளின் போது இந்து சமய அறநிலையத்துறை ஆணையர் பி.என்.ஸ்ரீதர், கூடுதல் ஆணையர் திருமதி சி. ஹரிப்ரியா, வடபழனி ஆண்டவர் திருக்கோயில் தக்கார் ல. ஆதிமூலம், மாநகராட்சி மண்டலக் குழுத் தலைவர் திருமதி சரிதா மகேஷ் குமார், இணை ஆணையர்கள் சு. மோகனசுந்தரம், திருமதி பெ.க.கவெனிதா, துணை ஆணையர் இரா.ஹரிஹரன், கண்காணிப்பு பொறியாளர் எம்,பழனி, உதவி ஆணையர் கி. பாரதிராஜா, மாநகராட்சி உறுப்பினர் நாகராஜன், கல்லூரி முதல்வர் திருமதி சி.லலிதா மற்றும் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.


